பிஸ்மில்லாஹி

குதுபுகள் பெருமானார்

முஹியத்தீன் ஆண்டவர்

# முனாஜாத்து சதகம்.

இது

மஹ்மூது பந்தர்

கவு. காதிரசனா மரைக்காயர் அவர்கள்

குமாரர்

சுல்தான் அப்துல்காதிர் மரைக்காயர்

இயற்றியது.

கலாரத்நாகரம் அச்சுக்கூடத்திற்

பதிப்பிக்கப்பட்டது.

சென்னை :

1914.

" பிஸ்மில்லாஹி "

# சாத்துக்கவிகள்.

இது

மஹ்மூதுபந்தர்

## கா. முகம்மதப்துல்காதிர்மரைக்காயரவர்கள்

இயற்றியது.

கழிநெடிலாசிரியவிருத்தம்.

பூவார்ந்த அலைகடற்சூழ் நெடும்புடவி மனுவானோர்
மக்லூ கெல்லாம்
மீவார்ந்த தோற்றமுறக் காரணமாய் விளங்குதிரு
நபிக ளாதர்
தூவார்ந்த சறஹூநெறி முறைதவரார் துலங்குதவ
வொலிகட் பெம்மான்
தேவார்ந்த சீரடிக்கு முனாஜாத்துப் பதிகமொன்று
செய்தா னம்மா. (1)

தென்காலு முருவகமு நிலைமடக்கு மடிமடக்குஞ்
சிலேடை யையும்
பின்காலும் வேற்றுமையே வெளிபடுத்தல் பிறங்குநிலை
நோக்கே யுட்கே
முன்காலு முவமாரு பத்திஞெடு தொகைமொழியே
தெரிச னங்கட்
பொன்காலு மெழுநான்கு செய்யுளலங் காரமுறப்
புனைந்தா னன்றே. (2)

வனங்குலவும் வகுதைபதி மஹ்மூது பந்தரினில்
வதியுஞ் சீர்த்தி
தினங்குலவு நான்மறையும் முத்தமிழுந் தெளிந்துணர்ந்த
புலவர் வேந்தின்
மனங்குலவு காதிரச னுமரைக்கார் செய்தவத்தின்
மகவாய்த் தோன்றுங்
கனங்குலவு சுல்தானப் துல்காதிர் மரைக்காயன்
கவிஞ ரேறே. (3)

பிறையாறு

## வெ. அப்துல் அஜீஜ்மரைக்காயர்

இயற்றியது.

தேனுகுஞ் சுவையுமணி யொளியுமுட
லுயிரதும்போற் றிகழ்ந்திங் காள்பெம்
மானுகு மொருநிமல னிணக்கமுற்றுப்
பிணக்குதறி மணக்கு மாண்பர்
தானுகு மொலிமார்க ளனைவரினு
மதிகநவந் தழைத்து வாழெங்
கோனுகும் புகழ்முகியத் தீனுகுங்
குத்புகணற் குரிசி லன்னுர். (1)

அருஞ்சிறப்பா னிலகுகழற் றெழுதன்பி
னேற்றியிவ ணணிமிக் கார்ந்த
பெருஞ்சிறப்பா னதுவிஃதென் றறிஞர்வியந்
தடுத்தடுத்துப் பேசுற் சாகந்

தருஞ்சிறப்பா னந்தவிதம் பயிற்றுதிருச்
சதகமதைச் சமைத்து மாண்புற்
றிருஞ்சிறப்பா னவன்றிறத்தைக் குணநயத்தைச்
சிறிதெடுத்திங் கியம்பக் கேண்மோ. (2)

பார்க்குமுரு வயதிஃதிற் சிறியவனு
கினுமொளிர்விற் பனத்தா லோங்கும்
பேர்க்குரிய தத்துவத்தாற் சத்துவத்தால்
வித்தகத்தாற் பிரசங் கத்தா
லார்க்குமுதி ரறிவுடைய நிபுணனெனக்
கலைஞனென வாய்ந்தோ னென்ன்
ஏர்க்குமொரு பெருங்கீர்த்தி யிளம்பருவ
முதலுலகி லிலங்கப் பெற்றோன். (3)

ஆயபெரும் மதியாளன் சத்யநெறி
தவராத வகத்தன் வேத
வாயனருள் தவப்பிரியன் சற்சனர்கள்
சகவாசன் வனப்பின் மாரன்
தூயநவவிற் பன்னன் கவிக்கம்ப
னினிமைதருஞ் சொற்சா தத்தன்
நேயனல ருசிதமொடு காவியப்ர
சங்கமது நிகழ்த்த வல்லான். (4)

பாரிலுயர்ந் திடுபுலவர் மிகமதிக்க
வகங்களிக்கப் பகைவர் நாணப்
பேரிலுயர்ந் திடுமரிய பிரபந்தம்
பலவியற்றிப் பிறங்கத் தந்தோன்

சீரிலுயர்ந் திடுவேத நெறிநீத
நெறிபோத நெறியிற் றேர்ந்து
நேரிலுயர்ந் திடுபழக்க மிறைவணக்க
மொழுக்கமது நிலேத்து வாழ்வோன். (5)

சொல்லினிய விற்புனர்க ளற்புதத்தி
ஞெலிமார்க டுதிகள் செல்வ
நல்லினத்தர் மிகுமூதூர் மகுமூது
பந்தருக்கோர் நயனம் போல்வான்
பல்லிசையின் பெருங்கீர்த்தி யெத்தனேயோ
வத்தனேயும் படர்ந்து மன்னும்
வெல்லியலார் திறத்துடைய காதிரச
ஞமரைக்கான் விரும்புந் தோன்றல். (6)

உற்ருலு மிவன்மகிமை யுரைத்தாலு
மிவன்வாய்மை யுரமார் கல்வி
கற்ருலு மிவன்றிறமை கதித்தாலு
மிவன்சீர்மை களிகொள் பாக்கட்
சொற்ருலு மிவன்வண்மை துணிந்தாலு
மிவனுண்மை தனுமாண் பெல்லாம்
பெற்ருலு மிவன்பெருமை யெவருமுறற்
கருமையெனப் பேசு வோமால். (7)

மணத்தாலு மெவர்க்கும்பிர பலத்தாலும்
புலத்தாலும் மகிமை சால்வங்
கணத்தாலு மிகைத்திடுவிற் பனத்தாலுந்
தனத்தாலுங் கணிப்பி னலும்

வணத்தாலு மிசையெழுமில் லறத்தாலுந்
திறத்தாலும் வரத்தி னாலுங்
குணத்தாலும் பலுகுமுயர்க் குலத்தாலும்
நலத்தாலுங் குலவு மேலோன். (8)

விடைகாட்டும் நாநயத்தை விறல்காட்டும்
மனத்திடத்தை விரிந்த நோக்கத்
திடைகாட்டு மன்பகத்தை யிசைகாட்டுஞ்
செயலியலை யிரங்குள் ளத்தைக்
கொடைகாட்டு முயர்குலத்தைக் குணங்காட்டு
மெனவான்றோர் குணித்த வெல்லாம்
நடைகாட்டு மிவன்மாட்டிங் கொருங்கமைந்து
காட்டிவரும் ஞாலத் தோர்க்கே. (9)

விழுமியசெந் தமிழருமை யறியாத
வுலுத்தர்களை வியந்து பாடிப்
பழுதுறும்புன் கவியதுபோ லின்றியுத
வடிகளின்சீர் பரிந்திங் கோதிச்
செழுமியலுந் தவநிதியு மாயுள்விருத்
தியுமாண்புந் திரண்டு நீண்டெப்
பொழுதுமிளிர் சிறப்பொடுவாழ் சுல்தானப்
துல்காதிர் புலவ ரேறே. (10)

பிறையாறு

## ச. கு. பரியநாதநாயகர்.

## இயற்றியது.

பூமருவுங் கடிபொங்கர் புலம்பரிதேன் மங்கையரின்
புகழ்மெல் லோதி
தேமருவும் பிரசமதை மறுகினிடை யருந்தவருஞ்
ஜெயிலான் றேயம்
பாமருவு மபுசாலிஹ் தூய்தவத்துத் திருமகவாம்
பருதி ஞானக்
காமருவு மெழில்நகராம் பகுதாதிற் பள்ளிகொளுங்
கருணை வள்ளல். (1)

அண்டரொடு மகிலமெலாந் தொழுதேத்தப் படைத்தளிக்க
வமைந்த வல்லோன்
முண்டகப்பூ மனமலர்கள் மலர்த்துமருள் மணிவிளக்கா
முதல்வ னம்மா
மண்டலத்தி னலகையிரு டனைமாற்றுங் கதிரவனாய்
வகுத்த செம்மல்
கொண்டலெனத் துதிகூறு முகியத்தீ னண்டகைதங்
குறுந்தாட் கன்பாய். (2)

நவமணிக டெறித்தொளிரு நதிபதியம் பரமென்ன
நனியே பூணும்
பவமணுகாப் படிமகளி னுரத்திலணி கன்னகையாம்
பறங்கிப் பேட்டைத்

தவமணியு மகத்தியனேர் காதிரசா னுமரைக்கார்
தந்த சேயாம்
புவனமிசைக் கலைக்கியானன் சுல்தானப் துல்காதிர்
புலவ ரேறே. (3)

கலக்கமிரு ளகத்தோர்க்கு விளக்குறுது மதியமெனக்
கருத்தி னோர்ந்தே
யிலக்கணமு மிலக்கியமு மொருங்கமைந்த கற்பனைக
ளிலங்க ஞான
வலக்கவிஞர் புகழ்ந்தேத்தி யகமகிழு மாண்புபெறு
மகிமை தாங்கும்
துலக்கமுறுஞ் சதகமொன்றை யருளியென்று மழியாத
சுகம்பெற் ருனல். (4)

இது
பரங்கிப்பேட்டை

## ஆ. நாராயணசாமிப்பிள்ளை

இயற்றியது.

பூம்பொழில் சூழும் புண்ணிய பறங்கிப்
பேட்டைபொற் பதியருள் விளக்காய்
நாம்பணி நலத்த முஹியதீன் ஞான
நற்றவக் கோன்பணி விழைந்து

கூம்பணி பொதிய வருமுன ஜாத்தாங்
கூறிடு சதகமோ தினனல்
ஆம்பணி யென்னக் கலையுணர் சுல்தான்
அப்துல்கா திருகவி யரசே.

பிறையாறு

## ஸ்ரீமத் - மு. செ. சுல்தான் அப்துல்காதிரு

அவர்களியற்றிய

கட்டளைக்கலித்துறை.

மனுக்கா சினிப்படு விந்தினுஞ் சீர்த்தி மலிந்திதய
மனுக்கா சிலாவரந் தந்தொரு பாவை மகவினைய
மனுக்கா சிரவம் படாதழைத் தாயிர மாண்புயர்நா
மனுக்கா சிக்காம்பகு தாதப்துல் காதிரு மாதவர்க்கே.

உதகஞ் சனிக்க வருங்குடை யார்தயை யோங்கநனி
சதகஞ் சமைத்தனன் முத்தமி ழோர்சிரந் தாங்கிடத்தன்
பதகஞ் சங்காட்டி மகுமூது பந்தர்ப் பதியமருஞ்
சிதகஞ் சமான சுல்தானப்துல் காதிரு சீரியனே.

அறங்குலவுங் காருண்ய மடுத்தாரை யாதரித்துத்
திறங்குலவும் ஐந்தருவுந் திகைப்புறவே கொடையளிக்கு
நிறங்குலவு நிகழ்முகம் மதுகவுது மரைக்காரின்
புறங்குலவு மருமகனும் பூர்த்திக்குஞ் சீர்த்தியுள்ளான். (5)

வனமிகைக்கு மருமூது பந்தரெனு வளநகரின்
கனமிகைக்குங் காதிரசனு மரைக் காரின்சேயாம்
தனமிகைக்குந் தந்தையின்பா றமிழரியைக் கற்றுணர்ந்து
மனமிகைக்குங் கவிமாரி யாய்ப்பொழியு மாமேகம். (6)

மின்னரிய வொளிவாகன் மீளிபெருங் காவுடைய
வென்னரிய சிற்றைய னென்றுமுறை யோங்கிவளர் [ற்
மன்னரிய நேர்மையிவன் மகத்துவற்றைச் சொல்லவென்று
பொன்னரிய பொற்குடத்திற் பொட்டிட்ட வாறுனேன்.()

பதிக்குமிரு பண்புடைய பாக்கியமும் யோக்கியமுங்
கதிக்குமியற் புகழ்ப்படைத்த கண்ணியனுந் திண்ணியனும்
துதிக்குஞ் சுல்தானப்துல் காதிரு மரைக்கான்மன்
மதிக்குநாற் கவிவல்ல மாட்சியுறு நாவலனே. (8)

## காரைக்கால் மூகோசா மரைக்காயர் அவர்கள்

### இயற்றிய

### தரவு கோச்சகக்கலிப்பா

சொல்லானு மனத்தானுந் தூய்மைநெறிச் செய்லானும்
பல்லர்னு மடவியர்கட் பணிந்திறைஞ்சித் தொழுதேற்றும்
அவ்லாவின் றிருதூத ராயமைந் துலகேற்ப
வல்லானுஞ் இடங்காட்ட வந்தநபிப் பெருமானார். (1)

மகமரபில் விளக்கமுறு மாதவத்தி னருமணியா
யிகம்விளக்கும் பொருண்மணியா யிகைநயத் தியற்பாகப்
பகம்விளக்கும் பகுதாதுப் பதிக்கரசாய் வந்தென்றுஞ்
சுகம்விளக்குஞ் சுல்தான்மு ஹிய்யித்தீ னுண்டகையார்.(2)

தருவளருஞ் செங்கழற்கோர் முனஜாத்து சதகமெனத்
திருவளருங் கலைமகளு மலைமகளுஞ் சிரங்கொள்க
விருவளருங் கற்பனையு மலங்காரமு மினிவாய்
மருவளரும் புகழ்பரவ மனமகிழ்ந்து செய்தளித்தான். (3)

போதறிவு வர்த்தகமும் பொற்புநிலைப் புண்ணியமுஞ்
சாதறிவு தவஞானஞ் சற்குணமு மெஞ்ஞான்றுந்
தீதறிவு வந்தெய்யத் திடங்காட்டுந் திண்ணியமு
மூதறிவு கவுசுமியா முதன்மைதிருப் பேரணும். (4)

# சிறப்புப்பாயிரம்.

தரங்கம்பாடி வித்வஸ்ரீ

ப. அ. முத்துத்தாண்டவராயபிள்ளையவர்கள்

இயற்றியது.

ஓதுமி னோதுமி னுலகிய லறிஞர்கா
ளோதுமி னோதுமி னுவப்புற் றோதுமின்
மின்றூழ் பொழிலகந் துன்று துழக்கி
மதுப்புது வெள்ளம் விதுப்புற வடித்துச்
சுரும்பினங் குடையும் விரும்பமர் துடவை
பகுதாது நிலைஇத் தகுமுரண் காதிரு
தன்பேர் நிறீஇ யின்புறீஇச் சதகந்
திறங்கொண் மாநகரப் பறங்கிப் பேட்டைத்
தீனவர் குலத்து வானவக் குரிசில்
காதிரு ஹசனு மரைக்காயர் கான்முளை
வாதியர் செருக்குக் காதிடும் வாக்கி,
நற்றவத் துறைநனி கற்றமெய்ப் புலவ
னிலக்கணக் கடலு மிலக்கியப் பௌவமு
முற்றப் பருகிய வித்தக வகத்தியன்
சுல்தா னப்துல் காதிரு தூயோன்
பல்கான் மொழிந்த பருப்பொருண் மாலையை
யோதுமி னோதுமி னுய்ந்தீ
ரோதுமி னீயி ருயர்தரற் பொருட்டே.

பிஸ்மில்லாஹி.

# குதுபுகள் பெருமான் முஹியத்தீன் ஆண்டகை

# முனாஜாத்து சதகம்.

## காப்பு - வெண்பா.

பூவார் பெருமான் முஹியத்தீன் பொற்பதத்தே
நாவார் முனாஜாத்து நானவிலக்—கோவாய்த்
தனியா யருவாய்த் தனிற்றாணா யானான்
நனியருளே காப்பு நயந்து.

## கடவுள்துதி - விருத்தம்.

நானாகத் தாயாகத் தந்தையாகவுமுறை நமருமாக
ஊனாக என்போடு நரம்புதிரம் தாமாக வுடலுமாக
வானாகப் புவியாக மலைக்கடலின் பொருணிதியின் மலிவுமாக
தானாகித் தனியாகி நின்றவனோர் சீரருளைத் தாங்குவாமே.

## நபிகள் பெருமான்துதி - விருத்தம்.

எஞ்சுங் குபிரி னிருளிரித்தே யிலங்கு பருதி பலகோடி
யஞ்சுஞ்சுடரி னழகுருவா யருளாநிலவு நபிபெருமான்
சஞ்சம்நயக்குந் திருசெவ்விக்கழலை நிவந்ததுணையடிகள்
தஞ்சம்புகழ்ந்தேற் சணிகலனாத்தலையே சுமத்தியருளுறுமே.

## குதுபுகள் பெருமான்துதி - விருத்தம்

பொருந்துங்குதுபு பெருமானார் பொலனா ரெழிலார் பொன்னடிகள்
வருந்தவருந்துங் குணநிதிகள் வளரமலிந்த திருவள்ளி
இருந்து புயங்கள் களிப்போங்கி யெழிலுஞ்செழுமை விழிதாங்கி
அருந்து மமுதம் பொருட்பயனா யன்பாப்பெறுதும் மிடிநீங்க.

பிஸ்மில்லாஹி.

# முனாஜாத்து சதகம்.

## நூல்.

### கட்டளைக் கலித்துறை.

பூந்தடம் மொய்த்த ஜெயிலா னகர்த்திருப் பொன்னரங்கம்
ஏந்தணங் குய்த்தி மகிழ்பூத்தி செவ்வி யெழூர்துலவிக்
காந்தவிர் சால்பகு தாதுகண் பள்ளி கனதியுறு
சாந்தநஞ் சோதி முஹியத்தீன் சீரடி சார்சரணே. (1)

பம்பும் வரக்கடல் பொங்கும் முஹியத்தீன் பாங்கடிகாள்
உம்பர் துதிக்கு மவணடி யன்றுநி யோதுமுழி
நம்பும் மறைமழை வாயா ரிறையரு ணல்லுருவார்
செம்பொன் முஹம்மது சங்கையால்பூத்த திருமரையே. (2)

கோகனகைக்குங் குறிகேட்பர் நின்சீர்க் கொடையிலரால்
கோகனகைக்கும் மிளிர்மணி பொன்முடி கொள்ளுமன்னர்
கோகனகைக்கும் வியன்செங்கோல் நெஞ்சுளங்கோத்தணியுங்
கோகனகைக்கும் பதக்கம் முஹியத்தீன் கோலடியே. (3)

அப்படி யென்ன வகையற்றான் நேசமா ரன்புருவே
இப்படி யென்ன நடிக்கு முஹியத்தீன் ஏரடிகாள்
தப்படி யேன்செயினுந் தப்புதப்பென்று சாற்றியருள்
எப்படியுஞ் செய்க என்தீமை யெண்ணாம லேகுமன்றே. (4)

தனமே யறமா மிருவழிக்கா வெற்குத் தானுறுதி
கனமே யிருமைக்கு மாக துதிகூர்வல் காணெழில்க
மனமே வருந்தேன் இரவா துதவிவர அருளின்
இனமே யுருகொள்க நேர்ந்தி முஹியத்தீன் ஏரடியே. (5)

அஞ்சவுங் காரண மென்னே யவத்தை யவத்தையெனக்
கெஞ்சா தருள்முஹி யத்தீன் அடிகணி கீர்த்திதர
சஞ்சலமேதே புறமொழி யெங்குறும் சாற்றினக்கால்
பஞ்சாப் பறக்கும் கவலை மிடிமைகள் பார்த்திடினே. (6)

முற்றூர் தவரினே னாயின் முனிய முறைகளெவை
சற்றுமில் சற்றுமில் என்றே முஹியத்தீன் தண்ணடிகாள்
பெற்று பெற்றென்று மகிழ்சுமை பெய்க பெருமைசெய்க
கற்றும் பயனென் கடாக்ஷமுற் றாலல்லோ காணுய்வதே. (7)

என்னா சொலவேண்டு முள்ளக்கிடக்கை யிதுவுமென
நன்னா யறிந்து மறியாப்போ னின்று நடித்துவரு
மன்னா முஹியத்தீன் நாத ரடியாகி மாண்புபெறின்
சின்னா னெனக்கே சுகமொன்றச் செய்குவை சீருறுமே. (8)

செய்த்தா னல்லல்ல வெனினின் னெழில்காண்கச் சீரெனுமால்
பெய்த்த சுதை பகுதாது முஹியத்தீன் பேரடிகாள்
மெய்த்தான் விரும் பெற்குப் பெய்கவினைதருள் மேகமெனக்
கைத்தான் சிறந்த நினைத்தொடுங் காட்சிக் கவின்புரினே. (9)

உரத்தால் சுமந்தார் பொருட்சுவை யாவு முவகையுற்று
மரத்தால் சுமந்தாரு முண்டு முஹியத்தீ மாவடிகாள்
வரத்தால் சுமந்தார் தவத்தாலும் நின்னை வளர்நிதியா
சிரத்தால் சுமந்தென் திருசார்ந்தைச் சீருஞ் சிறக்கவென்றே. (10)

துதிமலி நந்த ரபுசாலிஹ் செய்தவர் தூய்மைநலம்
நிதியுரு ஞானம் விளைதரு நன்கு நிலைமழவு
வதியு முறுப்பவை வாழ்க்கை நிகரென்னை மாண்பருள்க
உதவி பொழிக முஹியத்தீ னாண்டகை யோங்கடியே. (11)

தாமத மாருந் தழுவார் அலையன்ன தாரணிக்கே
தாமத மாரும் பெவையு மிழியுந் தபோதனர்கள்
தாமத மாரு மணியும் முஹியத்தீன் தாளடிகாள்
தாமத மாரும் வினைசேராச் சீரருள் தந்திடினே. (12)

தொழும்பென் முடிநின்றித் தோள்மேல் குதித்திச் சுடருறுக
தளம்பும் அருள்க முஹியத்தீன் சீரடி தம்மினிறை
கெழும்பொன் அறசு மகுடம் புனைந்தி கிருபையினால்
தழும்பிலா நின்சிர மும்பருந் தாண்டா தகைத்தெனுமே. (13)

என்னடா செய்கிற தென்கிறி தக்கதே யென்தகைக்கே
பொன்னடா நின் அருள் பெய்க முஹியத்தீன் பூவடிகாள்
மின்னடா சண்ணே கரனே சிரனே மிளிர்புயனே
தென்னடா கண்டாக் கரும்பா மனமுண்டு சீர்பெறற்கே. (14)

கண்ணே யுயிர்க்குயி ரேமுஹியத்தீன் கழலடிகாள்
மண்ணே நினக்குறு மாட்சியி னன்றே வளமுறுத்தி
விண்ணே தனையுறத் தோத்திரம் பெய்க வியன்பொருத்தி
எண்ணேயிலைசீ ரருள்ளி யணித்தியெற் கேன்பயமே. (15)

நன்மைக் களஞ்சியம் நாயன் முஹியத்தீ னல்லடிகாள்
என்னைக் கருணைக் கனிதந்து காத்தற் இயல்கவம்மின்
ஜின்னைப் பிணி நோயைப் பேயை யணுவிற் சிறிதவித்து
நன்ன ஜெயமாலை பூண்க அருள்படை நன்குறுமே. (16)

சென்னையா வார்த்திலை யென்று கருணைச் செழிப்பளந்தி
சென்னையாம் பட்டணப் பண்பு மறிந்தி திருத்துமா
சென்னையா ராள்வர்காண் நின்சீரே நின்அருள் ஏர்பொழிதி
சென்னையாம் அன்புகளிறு முஹியத்தீன் சேவடியே. (17)

சொல்லமாட் டெண்டா பொடாவென் றி யாடினை தொண்டெனக்
வெல்லேபுரிக அருள்க முஹியத்தீன் மேல்லடிகாள் [சே
எல்லா முதவுநின் கூத்தின் மகிழ்க்கூற்றி தென்றநில்
அல்லவும் நற்பொருளாநிதி பெய்யவு மாங்குறியே. (18)

வீசக் கதிர்வெயில் வெப்பங்கள் பூத்த வியன்பனரனய
மூசக் களியூர்ந்தி யேற்றன் சேணிகள் மொய்த்தவென
நேசத்தருள்கள் மலர்ந்தி முஹியத்தீ னேரடிகாள்
பேசக் கருவிழி மோந்துனைப் பெற்ற பெருமனனே. (19)

குறையா தெழும்புக நின்சீர் மணமுங் குணமுநிகர்ப்
பொறையா யருளின் தெருள்க தெருளின் பொலிர்தருள்க
மறையா முழங்குக நின்புகழ் நின்புகழ் மாட்சியென
மறையும் முழங்குக மன்னன் முஹியத்தீன் மாவடியே. (20)

உதவி யுதவி களாத்திருக் காட்சி யுவப்பருள்க
நிதமு நிதமுமே யன்பு மதம்வார்த்து நின்றிதொண்டேன்
பதவி பதவியாச் சேர்த்தி புகழ்கப் பழிச்சிடினும்
இதமு மிதமுமே நேர்செய் முஹியத்தீன் ஏரடியே. (21)

அன்னம் பயில்க நடைகள் சிறுபிறை யார்சுநுதல்
மின்னல் கொடிமேனிக் கார்க்குழல் காவி விழித்துகிர்வாய்ப்
பொன்னி னுடுக்குலஞ் சூழ்முகத் திங்கள் புகழ்மதுரத்
தென்னுரு பாத்திமா கல்பு முஹியத்தீன் சீரடியே. (22)

பொங்குங் கருணை யமுதூட்டி யென்னைப் புரக்குதியால்
சிங்கம் முஹியத்தீன் சீரடி காணினை செம்பொனொளி
தங்கம் நகைநிதி யென்னக் கைத்தாயுந் தழுவிநிற்க
செங்கதி ரோனி தொடேல்வினை யாட்டிற் சிறப்புளதே. (23)

ஜின்னினம் மற்றை யலகையின் பொல்லாப்புத் தீமைகளும்
இன்னிலத் தெம்மேல் தொடராது செல்லு மிடங்கடொறும்
நின்னுரு தம்மின் மொழிசெய்மின் சீரருள் நேர்பொழிமின்
பொன்னூர் மகிமைகள் பெய்மின் முஹியத்தீன் பூவடியே. (24)

படிக்கட்டளை யெனும் பாச வினைமாய்க்கும் பாக்யமெனும்
படிக்கட்டளை முஹிய்த்தீன் அீடிகாள் பயன் பெருகும்
படிக்கட்டளை யார்ந்தி சீராம் பழித்தேற்கும் பாகருட்டி
படிக்கட்டளை குதல் கொல்லும்போம் நின்னெழில் பார்த்திடினே. (25)

நல்லார் குணமறி யாநா யிதென்று நகைசெயற்க
எல்லாந் தெரிந்தி நீன்மாட்டு முறையிட லெங்ஙனமே
சொல்லால் புகழ்க வகையறி யேற்குத் துயர்களைதி
வல்லான் அருள்பூத்தி வள்ளல் முஹியத்தீன் மாவடியே. (26)

வரப்பலன் பூத்தி தொழும்பெற் கருள்வளம் வார்த்தருள்க
திருப்புகழ் பாத்திமா கர்ப்பமும் நான்கொரு திங்களிராப்
பொருப்பெனத் தோன்றின பூதனை மாளப் புடைக்குபுலி
யுருப்பொல ஞார்ந்தி துதிக்க முஹியத்தீன் ஓங்கடியே. (27)

நொவ்வளம் பேவளம் நூர்துறு நின்அன்பு நுண்ணணுவின்
இவ்வள வேனுந் தொழும்பெற் குதவி யினிதருள்க
எவ்வள வோபடி கொண் டளந்தாலு மெழில்வரமே
யவ்வள வும்பொறை யார்ந்தி முஹியத்தீ னூரடியே. (28)

மீன்மலியுங் கடலாடை யெழில் கால்க மின்கொடிகள்
வான் மலியும் மேனி யென்கமுகமதி வட்டமுய்க
பான்மலியும் புகழ் பெய்க நடித்தாள்க பார்மகட்குத்
தேன்மலியும் பலன் பூத்தி முஹியத்தீன் சீரடியே. (29)

உழப்பாளி வற்குளப் பாடு தெரிந்தி யுவந்தருள்தி
உழப்பாளி வேங்கையு மஞ்சுந் தவவர னூர்ந்துயர்ந்தி
உழப்பாளி மாமை பொலிந்தி கலிபாற்றி னூற்றவித்தி
உழப்பாளி யென்ன செழித்தி முஹியத்தீ னேங்கடியே. (30)

துய்ய புறுகான் மறைத்தேனின் அன்னையர் சூலகத்து
வைய்யம் புகழ்க கலிறுநல் நாதர் வழங்கவுண்டி
பய்ய லெனைநின் கடைக்கண் அமுதூட்டிப் பாங்குசெய்க
கொய்ய மலர்ந்தி அருள்க முஹியத்தீன் கோனடியே. (31)

சொல்லும் ஹிஜ்ரிநா னூற்றெழு பானொன்றின் தூய்றமுழான்
நல்ல மதிராவு பூத்ததென் றூர்தொறும் நட்புகொள்கப்
பல்லியம் ஏய்க்க மறையோதை கால்கப் பருதிவெட்க
வல்லரு ளூற்றி முஹியத்தீன் சீரடி வாழ்துணையே. (32)

சீனி நறுஞ்சுவை யேய்க்க இனிக்குந் திருமகளும்
மேனி யெழில்கால்க மின்போல் நடிக்கும் விலைநலத்த
கானி பகுதாது வேந்து முஹியத்தீன் காலடிகாள்
மானி மழையருள் பெய்க எற்கார்கிதி வாழ்வுறுமே. (33)

நோய்களும் நூந்தகலும் பவச் செய்கையும் நூந்தகலும்
பேய்களும் நூந்தகலும் புறம் பேசு புலைஞர்குண
நாய்களும் நூந்தகலுங் காண் முஹியத்தீ னூரடிகாள்
வாய்களு மாசீர்வதிக்கு நின்பே ரருள் வாய்த்திடினே. (34)

தாமரையும் மணிச் சீர்த்தியும் பூக்குந் தயங்குமுடித்
தாமரையும் புழுக்கைத் தொழில் சேவிக்குந் தாங்குவலித்
தாமரையும் புலி மற்றும் அணித்துய்க்குந் தானையநோய்
தாமரையும் மால் முஹியத்தீன் நேரடி சார்ந்திடினே. (35)

ஜலத்தால் நெருப்பினால் காற்றினால் மண்ணினால் தாங்கொளியால்
குலத்தால் அமைந்த உயிர்மற்றாம் நின்நட்பு கூர்ந்தவழிப்
பலத்தால் கருமுற்று மாயின நின் அருள் பால்பொழிக
நலத்தால் உயர்க சீர்பெய்க முஹியத்தீன் நாரடியே. (36)

பெருநயம் ஆர்தலால் பெம்மான் முஹியத்தீன் பெட்படிகாள்
கருணையம் வாரி புரள்தலால் நின்மாட்டுக் காவலயில்
பொருளினை வாய்தலால் மல்கலால் நல்லறம் பொன்மழையா
வரனுந் தவனும் பொழிதலால் வையம் வளம்பெரிதே. (37)

தேற்றும் படிக்கலை யாலடியேன் அருள் சீர்த்துநினைப்
போற்றும் படிப்புகழ் மாலை தொடுத்திப் பொறைகொளலே
தோற்றும் படியிறை தந்த விதியே சொலுமுறையே
யேற்றும் படிமுஹி யத்தீன் அடிநி யிடுமெழிலே. (38)

பொருள்கடல் வாஞ்சைப் பெரும்புனல் பட்டோர் புலனவிந்தார்
மருள்கடல் மாய்ந்தார் உழன்றார் முஹியத்தீன் மாவடிகாள்
அருள்கடல் முங்கினோ ராசைப் பெருக்கானா ரன்புறுத்தார்
தெருள்கடல் நீந்தினா ராழமும் ஓர்ந்தினார் சீர்த்திதம்மே. (39)

உவமானம் என்றி முஹியத்தீன் பொற்பி னுருவடிகாள்
அவமானம் ஒன்றா நிகர்காண்க நன்றாய்க ஆட்சிசெய்க
தவமார மல்குக வுய்க செழிக்க தயவருள்க
நவமார நிற்கின்ற நந்நபி யொப்பே நவில்தகுமே. (40)

புகழ்ந்தே னிலைசற்றும் நம்பு முஹியத்தீன் பொன்னடிகாள்
இகழ்ந்தே னினைத்துதி கூற முயன்றே னிவனுவமை
திகழ்ந்தே யிருக்கினும் நின்னைப் பழிச்ச செருக்கலதாய்
நிகழ்ந்தேன் திருப்பொருள் செய்குதியெற் கரு ணேர்தரவே. (41)

சந்தனம் பெற்ருேர் வழிவாய்ந்தென் சீர் சிரஞ்சங்கைதுவ
சந்தனம் பேரும் மலிக நினதருள் தாம்வரைப்பு
சந்தனம் பென்று விசைஇ வந்தாளுக தன்மைசெய்க
சந்தனம் பெய்த கவினை முஹியத்தீன் தண்ணடியே. (42)

எண்ணினு மென்ன நினையாரு மெண்ணு திருக்கினென்ன
தண்ணளியொத்து நடிக்கு மலால்குன்ற சிற்றுறுமோ
வண்ண முரிமை யணிக முஹியத்தீன் மாவடிகாள்
கண்ணுங் கரமுஞ் சிரமும் புயமுங் கவினவம்மே. (43)

பேயு மென்செய்யும்ஜின் னென்செயும் நின்சீர்த்த பேர்பகரின்
நோயுமென் செய்யுங் கபட மென்செய்யும் நுவலுறியேன்
நாயுஞ் சிறந்திட செய்யும் நினதுயர் நட்பருள்க
வாயும் மனமுங் கொளவாழ் முஹியத்தீன் மாவடியே. (44)

பாதகம் நீங்குகத் தொண்டெனை யாள்க பலனருள்க
ஆதிஅனாதி யருவுரு ஆக்கம் அமைந்த வுண்மை
நீதி நயம்பொருள் சோதி விளக்கே விளங்குநபி
நாதர் முஹம்மது பேரர் முஹியத்தீன் நாரடியே. (45)

மக்கப் பதிக்குத் துவக்கம் மதினு வளநகர்க்கே
தக்கப் பொருள்தன் நிலையா யிறைஞ்சுந் தகைநபியின்
பக்கப் பலன்நெறி யூற்றந் திருந்தும் பயன்படைத்தி
திக்குப் புகழ்சேர் முஹியத்தீன் சீரடி செய்துணையே. (46)

செல்வம் படைக்க வழிசெய்க நின்சீர் செழிப்பருந்திச்
செல்வம் படிப்பினம் நாமெனு மன்பெனை சேர்விரும்பச்
செல்வம் படித்த னேரோசொல் முஹியத்தீன் சேவடிகாள்
செல்வம் பலர்க்குவ ரேற்று நலம்பெய்த செய்தியெதே. (47)

நீரினில் தோய்த்த வுடலமு முய்த்த நினதருளால்
பாரினில் காட்சிப் பலனுக எற்கன்பு பால்தருக
வாரிதி நாணற் களவாந் தவங்கள் வளம்வளர்ந்தி
வீரிய வேங்கைவெல் வெற்றி முஹியத்தீன் மெல்லடியே. (48)

ஒருவன் திருவார் முஹம்மது செவ்வா யுமிழமுதம்
தெருளென் றிறைப்பண்பி னேழ் முறைத்தீட்சை திகழவுண்டி
அருளென் றலியறு காலு மிழக்கொள்கை யன்னதின்றி
பொருளென் றுபொன்னே பொழிக முஹியத்தீன் பூவடியே. (49)

உயர்நபி நாதர் உபதேச பாலூட்டி யோங்கருளால்
ஜெயங்கொளச் சேர்த்த கலையார் முஹியத்தீன் சீரடிகாள்
பயல் பகை யிப்லீஸ் லஅனத்துல் லாசெராப் பாங்குபெய்க
பயன்மழை செய்யுக மல்ஊன் வினைமாய்த்திப் பண்பினெற்கே. (50)

புகழூந் திருநபி நாதர் மரபின் புணைமணியா
நிகழூங் குதுபுகள் பெம்மான் முஹியத்தீ னேரடிகாள்
இகழும் மறமும் போம் நின்னைப்பெற் றுரைப்பெறினெனிலே
திகழும் பகுதாது நீரகம் பெற்றுர் சிறப்புமெதே. (51)

வாரணங் கூறுந் திரையால் மகிமை வளரமுதா
வாரணங் கூவு மிறைப்புகழ் நந்நபி யார்சிறப்பா
வாரணங் கூரும் நினதழ கன்புறை யாளெனது
வாரணங் கூடும் நின் சீரால் முஹியத்தீன் மாவடியே. (52)

தினமு மமரோர் பரவு முஹியத்தீன் சீரடிகாள்
மனமும் விழிசிரம் வாயுங் கரமும் வயம்பெருகக்
கனமுங் கொளத் தொட்டுரைத்தேத்தி யொத்திக் கவினிருத்தித்
தனமும் பெறப்பெற்றநின் இன்பைத்தே னெனல் தானிழுக்கே. (53)

இப்படி யிப்படி யாகின நின்புகழ் என்றுவப்பால்
அப்படி யப்படிக் கூறினென் இப்பழிப் பார்ந்தனவால்
எப்படி யெப்படி சொல்நின் தகையை யெழில்வளர்க
செப்படி செப்படி நீதி முஹியத்தீன் சீரடியே. (54)

பணமுஞ் சொரியு மளக்குஞ் சோற்றூண்கள் படிபிடித்துக்
குணமுஞ் சொரியுங் குருமை மகுடங் கொடைகுலவும்
மணமுஞ் சொரியும் முஹியத்தின் சீரடி வாழ்வருள்க
வணமுஞ் சொரியுந் தொழும்பெற் கறிவுகள் மல்கவென்றே. (55)

பங்கயம் நின்செவ்வி மான மலருமோ பார்பகுதாத்
சங்கையும் நின்சங்கை நேருக பெய்யுகச் சாலருள்க
தங்குநின் பேர்போல் விளங்குமோ செங்கதிர் சற்குணத்தே
பொங்கு புகழ்முத்தம் ஆர்க முஹியத்தீன் பொன்னடியே. (56)

கேட்கவுங் குற்றம் பொறுத்தற்கு மென்னைக் கிருபைதந்தே
ஆட்கொள வும் பலனுர்க முஹியத்தீன் ஆரடிகாள்
வேட்கொளல் யாரிடம் நின்னை யெற்பாடு விளங்கிதுவா
நாட்கொள வார்க்குதி நின்சீர்த்த நன்கன்றி நன்குமில்லே. (57)

பேரே பிறங்கலி னன்பின் அருண்மழை பெய்தலினல்
சீரே பிறங்கலின் தூய்வரம் மல்கலின் செய்தவத்தின்
நாரே பிறங்கலின் நாதன் முஹியத்தி னல்லடிகாள்
ஏரே பிறங்கலி னீயே நினக்கொப்பென் றேத்துவலே. (58)

படுவாப்பயல் மல்ஊன் அஞ்சத் தொழும்பென் பவந்தொலைவான்
இடுவா யெழில்கழல் நீட்டி முஹியத்தீன் ஏரடிகாள்
தொடுவா யெனஎற் கருண்மழை பெய்க துணைபுரிக
கெடுவார் மதியின் கலிப்புலிச் செய்கையின் கேடறவே. (59)

வானம் புகழ்பெய்க மண்ணே கரந்தாங்க மல்குகலை
ஞானம் அமுதுபா லூட்டத் திருமக ளூட்டியங்காண்
மோனம் விளங்க அப்துல்காதிர் பேராம் முரசறைய
ஆன முஹிபத்தின் சீரடி தொண்டனை யாள்தருமே. (60)

புரியாம் பகுதாது பூமன் முஹிபத்தின் பொன்னடிகாள்
கிரியூரவும் நின்மருங் காள் கொளப்பெற்றி இருமையின்றேல்
பரிவால் கரைக்கு முறுபலன் என்னென்னைப் பார்த்தருள்க
தெரியா தெரியென் வினைத்தீது மாளத் திருத்துகவே. (61)

சஞ்சீவிக் கென்ற குரு முஹிபத்தின் சரணடிகாள்
சஞ்சீவிக் கின்ற வொருதனி சீரருள் சார்ந்தியிர
சஞ்சீவிக் கின்ற பழக்களை யெள்ளித் தகைத்திமி
சஞ்சீவிக் கத்தியு மாசின்றி நோவினை சாய்க்கவென்றே. (62)

பொருடரும் மாமறை யார்கள் இமாமும் பொறைகுணத்தின்
அருடரும் பேர்ஜமா ஞதுது பும்நான்கே யானரென்று
வருடமுந் திங்களும் நாளும் முறைநான்கு வாய்வயதால்
தெருடருங் கல்விக் குவந்தி முஹிபத்தீன் சீரடியே. (63)

ஈமான் இருமூன்றுங் கொள்கை யிசுலாமைந் திங்குநடை
சீமான் இறைப் பண்பிங் கேழுந்தொகைப்படுஞ் சீர்வயதால்
காணுங் கடந்தி பகுதா துகண்ட நின் காலருள்க
மாஞம் விளங்குக வள்ளல் முஹிபத்தீன் மாவடியே. (64)

வுணங்கற் குரியானை நக்கபி காதரின் மாண்பதனை
அணங்கின் அறிவென்று நாற்பது தெய்தி அவிர்றவுழா
இணங்குற நின்றி முஹிபத்தீன் சீரடி யின்பருள்க
மணங்கொள் முஹம்மது செங்கை வழங்க வழங்குகையே. (65)

சகாயந் தனையே ரிகழ்ந்தான்கண் அன்பு தழுவுகண்டி
சகாயந் தருதி காருண்ய மனையீந்து தாங்கியினம்
சிகாவளம் நக்நபிக் கென்ற திருவளர் சீர்குணத்தின்
சிகாமணி நீயருள்செய்தி முஹியத்தீன் சேவடியே. (66)

பேசும் அபாபக்ரில் ஹம்மாமி தன்கதை பெய்தலறின்
நேசம் நினதெழில் மாட்டு விளங்கு நெறியலது
பாசம் உறுகோபி யென்று பகருநர் பாவியென்பேம்
மாசு சகித்திங் கருள்செய் முஹியத்தீன் மாவடியே. (67)

சாயந்திரங் காலை யென்றும் முறைபட்டுத் தான் தனிப்பாலை
சாயந்திரங் கொளச் சீர்யான் எழுதின் தகையபெரி
சாயந்திரங் கூட ஏடும் இடங்பெறுச் சற்குணமு
சாயந்திரங் கொள் முஹியத்தீன் நேரடி சார்சரணே. (68)

தடிதொடல் கள்ளன் புலைஞன் வினைப்படுந் தாரணியே
மிடிதொடல் ஏழ்மை யிகழ்ப்படும் என்பரால் மீவெருவிக்
கடிதொடல் ஊர்ந்து கருணை முஹியத்தீன் கால்மலரின்
அடிதொடல் ஆன கரஞ்சேர்த்த நீயெனை யாள்கடனே. (69)

கரும்புச மான விழியும் மரைநேர் கரமுமுய்யற்
கரும்புக ழாரு மவிழ்த மென்றெற்கு நல்அன்புசெய்க
கரும்பு கழனி மலிபகு தாது கருணையினல்
கரும்புகர் மேகம் கனதி முஹியத்தின் காலடியே. (70)

புண்ணியந் தேடப் பணஞ்செய்த நற்பலன் பொற்பறிந்தி
பண்ணை வளம் பகுதாது முஹியத்தீன் பாங்கடிகாள்
கண்ணால் கினதெழில் மாந்த வகையாக் கருதினெனுல்
தண்ணளி தந்தெனை யாளற்கு நல்ல தருணமிதே. (71)

அஃறிணைப் பண்பில் நவிலுதல் ஏற்கா அவனொருத்தன்
அஃகேனம் முன்னர்த் தழுவு மெழுத்தா மவையினமும்
அஃகுபே தம்பிற புள்வகை யூண்மற் றவிருயிரும்
அஃகலிலா செய்கு சீர்கொள் முஹியத்தீன் ஆரடியே. (72)

அகப்பா மருங்கி லுடுத்த பகுதா தணிமடந்தை
அகப்பார னைதல் அவித்தி நடிக்களன் றுந்துதிகள்
அகப்பாநா மாட்டறிவுத் தேன்எடுத் தளந் தாட்சிசெய்க
அகப்பாகா சீரெற்குப் பெய்க முஹியத்தீன் ஆளடியே. (73)

பாவியினென் பாவி யென்று நகைத்துப் பாதவிக்க
ஆவி அழிய வழிசெய்து வைத்திலை ஆண்டகையின்
மேவிய நந்நபி செய்கை பொறுத்து விளக்குமலால்
கூவிய தொண்டனைக் காப்பா முஹியத்தீன் கோவடியே. (74)

மருந்தும் பயக்கப் பொருளும தாங்கி மனமகிழும்
மருந்தும் மலருஞ் சிறக்க மணமுங்கி வாய்கமழு
மருந்தும் பழனும் பொருந்து மமுதுங்கி யண்டருது
மருந்தும் புருப்புகழ் சீர்கி முஹியத்தீன் ஆரடியே. (75)

நரபதி சீர்முஹி யத்தீன் அடிகணி நட்புசெய்க
கரமலர் ஏந்துங் கண்காவிகள் நோக்குங் கவின்செழிக்க
உரைமறை செவ்வா யிதழ்க் கொவ்வையூதும் உருவெழில்க
சிரமுடி யேற்கும் புயவரை தாங்குந் திருநடித்தே. (76)

வியன சரத்துல்மு பஷ்ஷரா பத்தாய் விளங்குமென்று
வய்து மொருபத்து மாக மருங்கினில் வானவர்கள்
நயமுற சூழ்நலம் பெற்றி யடியெற்கு நட்பருள்க
ஜெயனா வைய்யம் செழித்தி முஹியத்தீன் சீரடியே. (77)

கன்னம் புடைக்க வுலகுண்டும் நின்புகழ் காண்பெருக்கால்
கன்னம் புடைக்கக் குறையாது மல்குங் கனதியினுங்
கன்னம் புடையார் பகுதாதுக் காண்டை யவனிலெனக்
கன்னம் புடையா வளர்க முஹியத்தீன் ஆரடியே. (78)

பணிக்கும் புகழ் முஹியத்தீன் அடியருள் பால்பொழிக
மணிக்குலம் பொற்பொரு ளுதிய மெய்ப்பர் வணிகருமால்
அணிக்கும் மரையார்ந்த சீர்ப்பல னென்ப ரவண்வைதிகர்
பிணிக்குவை மாய்க்கு மருந்தென் பர்வைத்தியர் பேர்சிறந்தே. (79)

அலைவளம் ஆரு மமுதைக் கரும்புதே னுர்கனியை
மலைவளம் ஆரு மணியைப் பொன்மேரை மழைத்தருவை
நிலைவளம் ஆரும் புவிப்பேற்றைக் கூம்மொழி நேர்மைதெரின்
கலைவளம் ஆர் முஹியத்தின் அடிநினைக் காண்குநெஞ்சே. (80)

குளத்தில் மலர்ந்தன தாமரை யென்றுங் குருமணிகள்
வளத்தில் மகிழ்ந்தன மாகடல் வேழ மருப்புசந்தம்
விளைத்தி விளங்கும் பொருப்பென்று மன்பு விரிதவத்து
முளைத்தி முஹியத்தீன் சீரடி யென்புயம் மோந்துறுமே. (81)

காந்தும் மணிமுடி மன்னர்கள் மன்னன் கருணைமல்கும்
ஏந்தல் எழுமைக் குதவி பிணிக்கே யியல்மருந்து
சேந்த மரைநெஞ்சின் செல்வி தொழும்பெற்குச் சீரருள்க
சாந்தம் மணக்கும் பேரார் முஹியத்தீன் சரணடியே. (82)

மணப்பேழை செல்விதந் தாயகம் கல்வி வளப்பதியாம்
குணப்பேழை நல்லறத் தாறு வரக்குன்றங் கூர்தவத்துப்
பணப்பேழை சீர்முஹி யத்தீன் அடிகாளிப் பாரிடத்தே
வணப்பேழை நின்னை வாய்த்தெற்குத் துரும்பாம் மலையினமே. (83)

வாரி யருள்வளத் தண்ணல் முஹியத்தீன் மாவடிகாள்
பாரில் நினைக்காப்புச் சீர்ப்பொரு ளாக்கம் படைத்தமையால்
கூரும் மழையுந் திணைஐந் துயிருங் குழுவொடியான்
வீரமுஞ் சீர்மையும் பொன்பல வேய்ந்து விளங்குதுமே. (84)

அருக்கனும் வெம்மையால் சேப்பால் பவளம் அலையெரித்து
விரிக்குங் கடலே கொதிப்பால் முஹியத்தீன் மெல்லடிகாள்
பெருக்கின் அருளதால் நின்எழில் தாங்கும் பெருமையம்மா
இரக்கம் மிகுபுரி யெற்குநின் காவல் இருத்துதியே. (85

கற்கண்டும் பாகு மினிப்பருந் தஞ்சீர்க் கனதியுற்றி
கற்கண்டும் பொன்பொரு ளாநி விசும்பிடைக் கண்ணுயருங்
கற்கண்டும் பர்களும் நின்புக ழோதப காந்துமணிக்
கற்கண்டும் பிக்கை யஞ்சும்வேல் முஹியத்தீன் காலடியே. (86)

ஆயிரத் தாயிரம் பொன்மணிப் பொற்பை யளந்திடினும்
பாயிரத் தாயிநி யெற்கருளுந் தெருள் பல்வளனும்
ஆயிரத் தாம்பவளப் பொதி நல்நிதி யாகினையால்
சேயிரத் தானெனச் சீர்பெய் முஹியத்தீன் தேனடியே. (87)

வரமேவுஞ் சீமான் முஹியத்தீன் செல்வி மலரடிகாள்
உரைமேவு நின்மாட் டருள்பெருக் கூட்டு முயர்நறவம்
தரைமேவுங் கூந்தல் மணமென்று புல்லுவர் தம்மனையே
நிரைமேவு தேன்இனம் நாணலையும் புக்கி நீஞ்சுகவே. (88)

கல்வி விளங்கின காட்சி துலங்கின காருணியஞ்
செல்வம் விளைந்தன ஈகை நிவந்தன தேன்மறையாம்
சொல்லும் முழங்கின யன்பு வழங்கின தொண்டெனக்கே
அல்லும் பகலும் முஹியத்தீன் சீரடி ஆள்துணையே. (89)

அன்பு செயுக அடியேன் வருத்தா தணிதுணையா
யென்புல் னுளற் கருளும் வரனும் இனிதுபெய்க
நின்புகழ் மாலையும் சீர்கொள நேர்வாக்கு நீட்டுகவாம்
இன்பு செயுக எழில்க முஹியத்தீன் ஏரடியே. (90)

குலனும் மணியைப் பொருள்பொன்னைப் பாரில் குவித்தலினால்
நலனும் நினது மதிப்புக்கோப் பாமோ நயிம்பொழிக
பொலனும் கருணை முஹியத்தீன் சீரடி பொற்பருள்க
நிலனுஞ் சம்பத் தத்தனையும் அடுமை நிசழ்வலென்றே. (61)

பச்சை மரகதம் ஆர்முஹி யத்தீன் பலனடிகாள்
இச்சை புரிக தருக நிதிசீர் இருஞ் சுகத்துப்
பிச்சை யிடுக இருமைக்கு மாகுக பெட்புணைச்சேர்
எச்சி பெருக்கியும் பேய்கண மோட்டற் கியல்பெறுமே. (92)

சக்கறை யுங்கனி தேனுங் கசப்பாகுஞ் சங்குகதிர்
கக்கும் மணியு மிகழ்செருங் கற்பகங் கார்முகிலும்
பக்கம் இருந்து தொழும்புகள் செய்யும் பசலுமஞ்சும்
தக்க புகழ்முஹி யத்தீன் அடிநினைச் சார்ந்திடினே. (93)

ஆயுங் கலையாவும் ஆர்ந்தி முஹியத்தீன் அன்படிகாள்
நேயஞ் சொரிக தயநிதி யெற்கூர்க நின்றனருள்
பாயும் துடவையு ளாடிவரெழில் பாங்கு செய்க
நாயும் நலஞ்சாரின் நிந்தை செயநெறி நாயமெதே. (94)

பதிகமாக் கென்றி பழிச்சிப் பழிச்சிப் பலபதிக
நிதிகளாச் சொற்றுதி சும்மை முஹியத்தீன் நேரடிகாள்
மதிதரு வள்ளிநின் மாட்டு சுமத்து வளம்பெறுதி
விதிதரு பண்பே பிரதி விரும்பினை மேட்டிமைக்கே. (95)

உற்றிநி யன்பு பழிச்சினும் நிந்தை யுரைசெயினும்
அற்றிநி சீற்றம் பெருங்குற்ற மேனும் அணிபொருந்த
பெற்றிநி நட்பு முஹியத்தீன் சீரடி பேறுபெய்க
வெற்றி புரிக மகிழ்வல் இனத்தொடு வீடுமொத்தே. (96)

மணிமண் மாநின் துதிமாந்தும் வாயது மாண்பு சொல்க
பணிலமார் பொய்கை பசுந்தாது பொன்னகர் பண்புறுமால்
அணிமறை சும்மை யருள்பெருக் காலங் கமர்ந்தியதால்
தணிவிலா அன்பன் முஹியத்தீன் தாமரைத் தண்ணடியே. (97)

தந்தைநீ யன்புநி தாய்நி யருளுநி தாரணிநி
அந்தரநி வானி யுயிருநி தேனி யலைமலைநி.
சிந்தைநி சிந்திப்பும் நீயே யெனிலிறை சேர்திருசீர்
சொந்த வளமென்று சீர்த்தி முஹியத்தின் தூயடியே. (98)

களித்தன கண்டு விழிக்காவி தாமரைக் கைகளினம்
களித்தன மொண்டு சிரமும் அணிகொளக் கல்புயங்கள்
களித்தன கொண்டன சீர்மறை யன்பு கனித்துளங்கள்
களித்தன தொண்டெற் கருள்க முஹியத்தீன் காலடியே. (99)

புகழுக வாழ்க இறையருள் நம்பி பொன்னியர்பேர்
புகழுக வாழ்க படிப்பார் கேட்பார்குது பும்வலியும்
புகழுக வாழ்க சுல்தானப்துல் காதிர் பொருள்குலமும்
புகழுக வாழ்கவே வாழ்க முஹியத்தீன் பூவடியே. (100)

---

சுபுஹானறப்பிக் காறப்புல் இஜ்ஜதி அம்மாயஸிபூன
வஸலாமுன் அலல் முறுசலீங்வல் ஹம்துலில்லாஹி றப்பில்
ஆலமீன் ஆமீன் ஆமீன் ஆமீன் யாறப்புல் ஆலமீன்.

---